

சென்னையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பி யர் ஆய்வு இருக்கை வெளியிட்டுள்ள பேராசிரியர் எஸ். தனிநாயகம் அடிகளாரின் "பழந்தமிழ் இலக்கியங்களில் கல்விச் சிந்தனைகள்" நூலினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் துறை செயலாளர் (பொறுப்பு) வே. அமுதவல்லி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன தலைவர் ஆர், பாலகிருஷ்ணன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் ந.அருள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் கோபிநாத் ஸ்டாலின், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து நவ.11 அன்று

# திண்டுக்கல்லில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!





திண்டுக்கல்,நவ.9-

திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசின் கைப்பாவையான தேர்தல் ஆணையம் ஏதேச்சதிகாரப் போக்குடன் செயல்பட்டு, தமிழ்நாட்டில் சட்டப் பேரவை தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில் தமிழகத்தில் சிறப்பு வாக்காளர் திருத்தப் பணியினை (S.I.R.) கொண்டுவந்துள்ள தேர்தல் ஆணையத்தை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 11.11.2025, செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் திண்டுக்கல், மணிக்கூண்டு, மாநகராட்சி அலுவலகம் அருகில் நடைபெறவுள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சிமன்ற முன்னாள் மற்றும் இந்நாள் பிரதிநிதிகள், கிளை மற்றும் வார்டு நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு இந்திய தேர்தல் ஆணையத்திற்கு எதிரான தங்களது கண்டனங்களை பதிவு செய்து, இந்த ஆர்ப்பாட்டம் வெற்றிபெறச் செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை (SIR) கண்டித்து நடைபெற உள்ள

# மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திரளாகப் பங்கேற்போம்!

### சென்னை கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!





சென்னை, நவ.9-

சென்னை கிழக்கு மாவட்டக்கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (08.11.2025 - சனிக்கிழமை) மாலை 05.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, பிரிக்ளின் சாலை, எஸ்.ஆர்.பேலஸில் அவைத்தலைவர் கோ. ஏகப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம்கவி, ஜோசப்சாமுவேல், அ.வெற்றி அழகன், ப. ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி. மகேஷ்குமார், எம்.விஜய குமார், கே.எஸ்.எம்.நாதன், பரிதிஇளம்சுருதி, வரதன், என். பி.எம்.ஷேக்அப்துல்லா, கவிஞர் நன்மாறன். மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவஹர், புனிதவதிஎத்திராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, கூ. பி.ஜெயின், வே.வாசு, ஐ. சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், சொ. வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர். தேர்தல் பார்வையாளர்கள்: என்.கிருஷ்ணமூர்த்தி, இரா.நரேந்திரன் பி. முனியாண்டி, பி.எம்.யாழினி, ஓ.ஏ.நாகலிங்கம். பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, பி.ஜே.துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி. ரமேஷ் (எ) நீலகண்டன், பி. உதயசங்கர், ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலாதேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, நந்தீஸ்வரன், சுரேஷ். மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, எல்.பி.எப். மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், பி.விஜயகுமார், இரா.வீரமணி, மா. அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், து.ஆயிரம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் எஸ்.சசிகுமார் நன்றி கூறினார்.

இக்கூட்ட தீர்மானங்கள் வருமாறு :-

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் SIRக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை! என்ற முறையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் விடுத்த அழைப்பிற்கிணங்க வருகை தந்த 49 கட்சிகளின் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்தும் இக்கூட்டத்தில் பங்கேற்காத கட்சித் தலைவர்களை அவரவர் கட்சிகளில் SIR குறித்து விவாதித்து ஜனநாயகத்தைக் காத்திடும் முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்ட முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரை வழிகாட்டிகளாக கொண்டு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டலில் கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சரின் முன்னெடுப்பில் திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டங்கள், சட்டமன்றத் தொகுதி தோறும் கலைஞர் நூலகம், முரசொலி பாசறை பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம், இளம் பேச்சாளர்களை தேர்ந்தெடுத்து கருத்தியல் பயிற்சி அளிப்பது, கலைஞர் மாணவ பத்திரிகையாளர் திட்டம், கலைஞர் நிதிநல்கை திட்டம் ஆகிய கருத்தியல் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்ததின் தொடர்ச்சியாக..

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சென்னை வள்ளுவர் கோட்டத்தில் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் திருக்கரங்களால் துவக்கி வைக்கப்பட்ட திமுக 75 அறிவுத் திருவிழாவும் அவ்விழாவில் 8.11.2025 முதல் 16.11.25 வரை நடைபெறும் முற்போக்கு புத்தகக் காட்சியும், இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இரு வண்ணக்கொடிக்கு வயது 75 எனும் கருத்தரங்கமும், 80க்கும் மேற்பட்ட பல்துறை வல்லுனர்களின் எண்ணங்களை கட்டுரைகளாக பெற்று உருவாக்கப்பட்டுள்ள காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு என்ற புத்தகமும் இந்த அறிவு திருவிழாவின் நோக்கத்தை தெள்ளத் தெளிவாக இளைஞர்களிடையே எடுத்துச் சென்று அவர்களின் முற்போக்கு சிந்தனைகளையும் அரசியல் உணர்வையும் வாசிப்பு பழக்கத்தையும் ஈடேற்றட்டும், வளமான இளைஞர்களை உருவாக்கட்டும் என வாழ்த்தி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (SIR) கொண்டு வந்துள்ளதை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் வருகிற நவம்பர் 11/11/2025 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று காலை 10 மணி அளவில் சென்னை தங்கசாலை, மணிகூண்டு அருகிலுள்ள, அரசு அச்சகம் அருகில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்தினர் மற்றும் தோழமை கட்சியினர் திரளாக பங்கேற்று இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை மாபெரும் வெற்றியடைய செய்ய உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறை வேற்றியது.





திருவள்ளூர் மேற்கு மாவட்டம் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளரும் திருவள்ளூர் நகரம் 1 வது வார்டு செயலாளர் ஜி. வேலாயுதம் தாயாரும் திருவள்ளூர் நகராட்சி 1 வது வார்டு கவுன்சிலர் வசந்தி வேலாயுதம் மாமியாருமான மறைந்த ஜி.பொஜ்ஜியம்மாள் திருவுருவப்படத்தை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார். உடன் வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., நகரக் கழகச் செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், கூளுர் எம்.ராஜேந்திரன், மேயர் ஜி.உதயகுமார், சன்.பிரகாஷ், டி.முரளிகிருஷ்ணன், ஜி. ராஜேந்திரன், ஜி.நாராயணபிரசாத், தி.ஆ.கமலக்கண்ணன், ராஜேஷ்வரி கைலாசம், இ.குப்பன், டி.என்.ஆர். சீனிவாசன், டி.கே.பாபு, அயூப்ஆலி, நாகராஜ், ஆ.பவளவண்ணன், உள்படபலர்உள்ளனர்.



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 11 ஊராட்சிகளுக்கு குப்பை சேகரிக்கும் வாகனங்களை 06.11.2025 அன்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் உட்பட பலர் உள்ளனர்.

### விருதுநகர் வடக்கு – தெற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில்

# நவம்பர் 11 -SIR-ரைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர்கள்

### கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் -தங்கம் தென்னரசு அறிவிப்பு!





விருதுநகர். நவ.9-

தமிழ்நாட்டில் தொடங்கியுள்ள தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வினை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வரும் நவம்பர் 11ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று விருதுநகர் வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் காலை 10 மணி அளவில் விருதுநகர் மாரியம்மன் கோவில் திடலில் மாவட்டச் செயலாளர்கள் - கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக விருதுநகர் மாவட்டச் செயலாளர்கள் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் சட்டப் பேரவை தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெற இருக்கும் சூழ்நிலையில், ஒன்றிய அரசின் கைப்பாவையாக இயங்கும் இந்திய தேர்தல் ஆணையம், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வினை (SIR) நவம்பர் 4ம் தேதி முதல் தமிழ்நாட்டில் அமல்படுத்தும் பணியைத் தொடங்கி உள்ளது.

தி.மு.கழகம் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த நிலையிலும் இந்திய தேர்தல் ஆணையம் போதிய கால அவகாசமும் மற்றும் முறையான வரையறையும் கொடுக்காமல், இந்த தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வினைக் கொண்டு வந்து தகுதியான வாக்காளர்களை சேர்த்திட இயலாமல் போய்விடக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி உள்ளது.

'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்கிற ரீதியில், வாக்காளர் சீராய்வு என்கிற பெயரில், தமிழ்நாட்டு வாக்காளர் பெருமக்களை பாடாய்படுத்தும் இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பாக ஒன்றிணைந்து வருகின்ற நவம்பர் 11ம் தேதி அன்று காலை 10.00 மணியளவில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என்று அனைத்து கட்சித் தலைவர்கள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலைவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கழகத் தலைவர், தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி விருதுநகர் வடக்கு-தெற்கு மாவட்ட தி.மு.க. உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து 11.11.2025 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் விருதுநகர், மாரியம்மன் கோவில் திடலில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது. இதில் மதச்சார்ப்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள், செயல்வீரர்கள், பொதுமக்கள் திரளாகக் கலந்துகொள்ள வேண்டுகிறோம்.

இவ்வாறு விருதுநகர் வடக்கு, தெற்கு, மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### ரூ.1.17 கோடி மதிப்பீட்டிலான 3 முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு!

# கடலூர் மாவட்டத்தில் ரூ.11.17 கோடியில் 8 புதிய திட்டப் பணிகள்!

### அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அடிக்கல் நாட்டினார்!

கடலூர், நவ. 9-

வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், முன்னிலையில் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப் பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.1.17 கோடி மதிப்பீட்டிலான 3 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.11.17 கோடி மதிப்பீட்டிலான 8 புதிய திட்டப் பணிகளுக்கு 06.11.2025 அன்று அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த 11 ஊராட்சிகளுக்கு ரூ.27,10,500 மதிப்பீட்டிலான குப்பை சேகரிக்கும் வாகனங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையும் நோக்கில் செயல்படுத்தப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 4,50,134 குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை வழங்கப்பட்டுவருகிறது. மேலும், முதியோர்களின் நலன் கருதி மாதந்தோறும் ரூ.1,200 ஆக ஓய்வூதியத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,40,000 முதியோர்கள் பயனடைகின்றனர்.

மகளிர்கள் வேலைக்கு சென்று வருமானம் ஈட்டுவதில் பேருந்து பயணத்திற்காகவே ஒரு பகுதியினை செலவு செய்கின்றனர். எனவே அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக மகளிர் விடியல் பயணம் திட்டத்தினை செயல்படுத்தியன் மூலம் கடலூர் மாவட்டத்தில் தினந்தோறும் 1,48,209 மகளிர்கள் கட்டணமில்லாமல் பேருந்து பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்திடவும், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் பல்வேறு துறைகளின் மூலம் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், கொத்தவாச்சேரி மற்றும் அரங்கமங்கலம் பகுதியில் தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தலா 35 இலட்சம் மதிப்பீட்டில் உளர் களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடம் திறந்துவைக்கப்பட்டது. கொத்தவாச்சேரியில் தரம் பிரிப்புக் கூடத்தின் அளவு 125 மெ.டன் அளவிலும், உலர் களத்தின் அளவு 270 ச.மீட்டர் அளவிலும் மற்றும் அரங்கமங்கலத்தில் கொத்த வாச்சேரியில் தரம் பிரிப்புக் கூடத்தின் அளவு 125 மெ. டன் அளவிலும், உலர்களத்தின் அளவு 272 ச.மீட்டர் அளவிலும் கட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் குறிஞ்சிப்பாடியில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்படும் என்று அறிவித்தார். இதனை நிறைவேற்றும் வகையில் குறிஞ்சிப்பாடியில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி புதிய வட்டாட்சியர் அலுவலகம் ரூ.6.93 கோடி மதிப்பீட்டில் தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம்தளம் தலா 397 ச.மீ பரப்பளவுடன் என மொத்தம் 1191.00 ச.மீ பரப்பளவில் கட்டும் பணிக்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது. தரைதளம் வரவேற்பு அறை, காத்திரப்புக் கூடம், நுழைவு வாயில் கணினி அறை, அலுவலக அறை, கழிப்பறை வசதிகளுடனும், முதல்தளம் வட்டாட்சியர் அறைகள், அலுவலக அறை, கழிப்பறை வசதிகளுடனும், இரண்டம் தளம் கூட்டரங்கம், பதிவறை, நில அளவையர் பிரிவு, அலுவலக அறைகள் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

அரசு மூலம் வழங்கும் மருத்துவ வசதிகள் பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளும் வகையிலும், மகப்பேறு சிகிச்சை நகர்ப்புற பகுதிகளுக்கு சென்று மேற்கொள்வதை குறைத்து உள்ளூரிலேயே பிரசவம் மேற்கொள்ளவும், அவசர காலங்களில் பொதுமக்கள் அருகிலேயே சிகிச்சை மேற்கொள்ளவும் சுகாதாரத் துறையின் சார்பில் ஆடூர்அகரம் மற்றும் கீழ்பூவாணிக்கும் பகுதியில் தலா ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் அரசு துணை சுகாதார நிலையம் அமைத்திட அடிக்கல் நாட்டப்பட்டது.

பள்ளி மாணவர்கள் பாது காப்பான சூழ்நிலையில் மனதிற்கினிய வகையில் கல்வி கற்றிடும் வகையில் குறிஞ்சிப்பாடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்டார் முள்ளிப்பள்ளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட கனிமவள நிதியின் கீழ் தலா ரூ.94.24 இலட்சம் மதிப்பீட்டில் 4 வகுப்பறை கட்டடங்கள், குண்டியமல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் மாவட்ட கனிமவள நிதியின் கீழ் ரூ.47.12 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் 2 வகுப்பறை கட்டடங்கள், ஆடூர்அகரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.47.12 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டடம் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் தங்களது புத்தகம் வாசிக்கும் திறனை அதிகரித்திடவும், பொதுஅறிவு மற்றும் பிற தகவல்களை படித்து பயன்பெறும் வகையிலும், போட்டி தேர்விற்கு தயாராகும் தேர்வர்கள் படித்து பயனடையும் வகையிலும் குறிஞ்சிப்பாடி பேரூராட்சியில் ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. மேலும், கருங்குழியில் ரூ.74.50 இலட்சம் மதிப்பீட்டில் கிளை நூலகம் அமைத்திட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் குறிஞ்சிப்பாடி நகரமன்ற தலைவர் கோகிலா குமார், துணைத்தலைவர் இராமர், செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை (கட்டடம்) சிவசங்கரநாயகி, மாவட்ட சுகாதார அலுவலர் பொற்கொடி, மாவட்ட நூலக அலுவலர் முருகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.